**MCOP NO:2736/2024 DATE: 12.08.2026**

ம.சா : 1

பெயர் : திரு.விஷன்லால்

த/பெ : திரு.மோகன் லால்

வயது : 42

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 12.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் விபத்து காயத்திற்காக இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தமிழில் பேச தெரியும். ஆனால் தமிழில் படிக்க தெரியாது. எனது வழக்கறிஞர் பிரமாண பத்திரிக்கையில் சொல்லிய விவரங்களை எனக்கு எடுத்து கூறி அதை நான் புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். விபத்து 23.03.2024 ல் மதியம் 02.00 மணிக்கு நடந்தது. இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டி சென்றேன். நான் விபத்து சமயத்தில் Deepyog Consumer Products Pvt. Ltd., என்ற நிறுவனத்தில் Salesman ஆக பணிபுரிந்து வந்தேன். தற்போதும் அதே பணியை தொடர்ந்து செய்து வருகிறேன். கடந்த 5 வருடங்களாக நான் மேற்படி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு நான் வேறு நிறுவனத்தில் பணி ஏதும் செய்யவில்லை. நான் கொடுத்த புகாரில் கணேஷ் டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக சொல்லப்பட்டு விட்டது. எனக்கு மாதம் சம்பளம் ரூ.22,000/– ஆகும். விபத்து தேதியில் நான் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கவில்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தேன். அதனை மசாஆ10 ஆக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஓட்டுநர் உரிமத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்ற தேதி 15.12.2025 என்று காட்டப்பட்டுள்ளதால் விபத்து தேதியில் நான் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய விலாசத்தை மாற்றியதால் மசாஆ10ஐ நான் புதியதாக பெற்றுள்ளேன். நான் பழைய முகவரியிலிருந்து புதிய முகவரிக்கு மாறியது சம்பந்தமாக ஆவணங்கள்

எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பிறந்த தேதி எனக்கு நியாபகம் இல்லை. ஆதார் அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமத்திலும் என்னுடைய பிறந்து தேதியானது வெவ்வேறு தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எந்த ஆவணத்தில் உள்ள தேதி சரியானது என்றால் ஆதார் அட்டையில் உள்ள தேதி தான் சரியானதாகும். எனது வங்கி கணக்கு அட்டையின் முதல் பக்கத்தை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிறுவனத்தில் நான் வேலை செய்யவில்லை என்றும், அதனால் தான் வங்கி கணக்கு பட்டியலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணிபுரிவதாக சொல்லப்படும் நிறுவனம் ஆரம்பித்து 3 வருடங்கள் தான் ஆகிறது என்பதால் நான் 5 வருடங்களான பணிபுரிந்து வருகிறேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனகுறைவால் நடந்தது என்பதை மறைத்து தவறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்றேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை தாக்கல் செய்தால் எனக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்வது பொய் என்று தெரிந்துவிடும் என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனகுறைவால் நடந்தது என்பதாலும், விபத்து தேதியில் நான் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கவில்லை என்றாலும், 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.